ஈழமுரசு

Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE **Gratuit**
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

**Impression / Printer:**
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ

பிரித்தானியா:
**Eelamurasu Weekly**
15 Vicarage lane,
Ilford, IG1 4AG, U.K
E.Mail-eelamurazu.uk@gmail.com
**078 8679 0198**
MOHAN

ஜேர்மனி:
T C C (வெளியீட்டுப் பிரிவு)
POSTFACH - 101 613
46016 OBERHAUSEN
TEL: 0208 205 99 103
FAX: 0208 205 99 104

கனடா:
2390 Eglinton ave east #230,
Toronto, ONT M1K 2P5.
Tel: 416 752 4846 / 416 8573 941
Fax: 416 752 4136

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

**சந்தா விபரம்**
**(அஞ்சற் செலவு மட்டும்)**
**வருட சந்தா**
**பிரான்ஸ் 60€**
**ஐரோப்பா 65€**
**ஏனைய நாடுகள் 70 €**

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

# இலங்கையில் இரு தேசங்கள்....

சரத் பொன்சேகா வெற்றி பெற்ற இன்னொரு மாவட்டம் மத்திய மாகாணத்திலுள்ள மலையகத் தமிழர்கள் அதிகமாக வாழும் நுவரெலிய மாவட்டமாகும். கொழும்பில் தமிழர்கள் அதிகமாக வாழும் தொகுதிகளில் அனைத்திலும் மகிந்த தொல்வியடைந்துள்ளார். கொழும்பில் உள்ள தமிழ் மக்களும் சரத் பொன்சேகாவிற்கே தமது வாக்கை பெருமளவில் வழங்கியுள்ளனர்.

இந்தத் தேர்தலின் முடிவுகள் மூலம் சிறீலங்கா அரசுடன் இணைந்து செயற்படும் அனைத்து ஒட்டுக் குழுக்களும், ஒட்டுக் கட்சிகளும் தமிழ் மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

இதேவேளை, குறைந்தளவு வாக்குகள் பதிவான மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. பெரும் அழிவை இவ்விருவராலும் சந்தித்த மக்கள் இந்தத் தேர்தலில் அக்கறை கொள்ளவில்லை என்பதுடன், பலர் இன்னும் தடுப்பு முகாம்களில் சிறை வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்டத்தில் 43 வீத வாக்குகளும், மன்னாரில் 34 வீத வாக்குகளும் பதிவாகியுள்ளன. ஆக மொத்தத்தலில் வடக்கில் அனைத்து 5 மாவட்டங்களிலும் 50 வீதத்திற்கும் குறைவான வாக்குகளே பதிவாகியுள்ளன. கடந்த 2005 ஜனாதிபதி தேர்தலின்போது 35 வீதமான வாக்குகள் பதிவாகியிருந்தன. விடுதலைப் புலிகள் வாக்களிப்பைத் தடுத்தமையாலேயே இந்த நிலை ஏற்பட்டதாகவும், இதனாலேயே அப்போது எதிர்த்துப் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்க தோல்வியை சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் குற்றம்சாட்டப்பட்டது. விடுதலைப் புலிகள் தற்போது இல்லை என பிரச்சாரம் செய்யப்படும் இந்நிலையில், 50 வீதத்திற்கும் குறைவான வாக்குகளே பதியப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கையின் ஒட்டுமொத்த வாக்குகளின் *(14 கோடியே 88 ஆயிரத்து 500 வாக்காளர்கள்)* மகிந்த ராஜபக்ச 60 இலட்சத்து 15 ஆயிரம் வாக்குகளைப் பெற்று (57.88 வீதம்) ஆட்சியைக் கைப்பறினார். ஜெனரல் சரத் பொன்சேகா, சுமார் 41 இலட்சத்து 73 ஆயிரம் (40.15 வீதம்) வாக்குகளைப் பெற்றார். தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் சரத் பொன்சேகாவிற்கு மொத்தம் 5 இலட்சத்து 73 ஆயிரத்து 67 வாக்குகளும், மகிந்த ராஜபக்சவிற்கு 3 இலட்சத்து 45 ஆயிரத்து 41 வாக்குகளும் கிடைத்தன.

இதேவேளை, கடந்த 2005ம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 48 இலட்சத்து 87 ஆயிரம் வாக்குகளை பெற்ற மகிந்த ராஜபக்ச, தமிழின அழிப்பிற்கு பின்னரான இத் தேர்தலில், சிங்கள மக்களிடம் இருந்து சுமார் 18 இலட்சத்திற்கு அதிகமான வாக்குகளை மேலதிகமாகப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, தேர்தலில் வெற்றி பெற்ற மகிந்த ராஜபக்ச, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகா தங்கி இருந்த கொள்ளுப்பிட்டி சினமன் விடுதியை இராணுவத்தைக் கொண்டு சுற்றி வளைத்தார். சரத் பொன்சேகாவுடன் தங்கியிருக்கும் தப்பியோடிய இராணுவத்தினர் 400 பேரை கைது செய்யவே இந்நடவடிக்கை என்றும் கூறப்பட்டது. இதனால், தேர்தல் முடிவுகள் வெளியாகிய புதனன்று பெரும் பதற்றம் நிலவியது. எனினும் இரவு சரத் பொன்சேகா மட்டும் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார். வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு படையினர் மற்றும் வாகனங்கள் உட்பட அனைத்தையும் அரசு விலக்கிக் கொண்டு அவரைத் தனியாக வீடு செல்ல அனுமதித்தது. தனி ஒருவராக எவ்வித பாதுகாப்புமின்றி விடுதியைவிட்டு இரவு புறப்பட்ட பொன்சேகாவின் கார் சோதனையிடப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு இதுவரை வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பு நீக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கு வழங்கப்பட்டிருந்த வாகனங்களை மீளளிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார். இராணுவத்திலிருந்து விலகிச் சென்று அவருடன் இருந்த ஒன்பது இராணுவத்தினர் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கிறார்கள் என்றார்.

இதேவேளை, தனது பாதுகாப்பு நீக்கப்பட்டிருக்கின்றமை தமது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையை ஏற்படுத்தியுள்ளது என சரத் பொன்சேகா கூறியுள்ளார். அத்துடன், தேர்தல் முடிவுகளை தான் ஏற்கவில்லை என்றும், இந்த முடிவுகள் இரத்துசெய்யப்படும் நோக்கில் சட்ட நடவடிக்கைகளைத் தான் தொடுக்கவிருப்பதாகவும் தேர்தல் ஆணையத்துக்கு தான் எழுதிய கடிதத்தில் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அரச ஊடகங்களை தனக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யப் பயன்படுத்தியது, அரச நிதிகளை தேர்தல் வெற்றிக்காக பயன்படுத்தியது, இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் வாக்களிக்க விடாமல் தடுத்தது போன்ற விதிமீறல்களை செய்ததாக மகிந்த ராஜபக்ச மீது சரத் பொன்சேகா குற்றம்சாட்டியுள்ளார்.

இதேவேளை, தனக்கு உயிரச்சம் இருப்பதாகவும், இதனால் நாட்டை விட்டு வெளியேறப் போவதாகவும் சரத் பொன்சேகா பிபிசி சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார். 'இலங்கையில் சட்டம் ஒழுங்கு கிடையாது. நான் விமான நிலையத்துக்கு செல்வதும் தடுக்கப்பட்டுள்ளது. நாட்டை விட்டு செல்ல எனக்கு அனுமதி அளிக்கப்படக் கூடாது என்று அவர்கள் விமான நிலைய அதிகாரிகளுக்கு கூறியுள்ளனர். இது பற்றி ஏதும் சொல்ல முடியாது எனவும் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.

இதற்கிடையே, உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு இருப்பதால், பாதுகாப்பு அளிக்குமாறு இந்தியாவிடம் உதவி கேட்க சரத் பொன்சேகா முடிவு செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. பொன்சேகாவிற்கு ஆதரவு வழங்கிய மனோ கணேசன் கூறுகையில், 'சரத் பொன்சேகா, பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அண்டை நாடான இந்தியாவின் தூதரக அதிகாரிகளை சந்தித்து, பொன்சேகாவின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்குமாறு கோரிக்கை விடுக்க இருக்கிறோம் என்று தெரிவித்தார்.



இதற்கிடையே, சட்ட விரோதச் செயல்களில் ஈடுபட்ட யாரும் நாட்டை விட்டு வெளியேறி விடாமல் பார்த்துக் கொள்ளும்படி விமான நிலைய அதிகாரிகளுக்கு சிறீலங்காப் பாதுகாப்புத் துறை உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது. பொன்சேகா மற்றும் அவருக்கு உதவியதாகக் கருதப்படும் பல முன்னாள் இராணுவ அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்தி அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதே பாதுகாப்புத் துறையின் நோக்கமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை புதிய இடதுசாரி முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று அதன் தலைவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ஜெனரல் சரத் பொன்சேகா நடவடிக்கைகள் மேற்கொள்வாராயின் அவருக்கு ஆதரவு வழங்குவதற்குத் தாம் தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுஇவ்வாறிருக்க, ஜே.வி.பி. தலைவர் சோமவன்சவுக்கு சிறீலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் செயலரும் மகிந்தவின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ச தொலைபேசி மூலம் மிரட்டல் விடுத்துள்ளார். தான் மேற்கொண்டுவரும் அரசியல் வேலைகளை உடனடியாக கைவிடுமாறு கோத்தபாய மிரட்டினார் என்று சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். வியாழனன்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் கூறுகையில், இன்று (வியாழக்கிழமை) காலை 9.21 மணியளவில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய தனது தொலைபேசி இலக்கமான 077-3501626 என்ற இலக்கத்திலிருந்து அழைத்தார். வெளிநாடுகளில் ஜே.வி.பியின் நடவடிக்கைகளை நிறுத்தாவிடின் என்னை கொலை செய்யப்போவதாக அவர் மிரட்டினார். ஜே.வி.பி. யின் லங்கா பத்திரிகையை தீயிட்டு கொழுத்தப்போவதாகவும் மிரட்டினார். ஒருதடவை வரப்போகும் சாவை சந்திப்பதற்கு தயாராகவே இருப்பதாக நான் கூறினேன். அதன்பின்னரும் எனக்கு கொலை அச்சுறுத்தலை விடுத்துவிட்டு அவர் தொலைபேசியை வைத்துவிட்டார் என்று கூறியுள்ளார்.



CENTRE DE BEAUTE INDIEN



தமிழர்களால் நடத்தப்படும்
ஆண்கள் அழகு நிலையம்.
தொடர்புகளுக்கு : பாலன்
33, rue Philippe de Girard
75010 Paris, M° : La Chapelle.
Tel : 06 63 01 75 80